இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 09.06.2026

# இரண்டு கட்சிகள் இருவேறு காட்சிகள்!

தங்களது இயக்கத்தை நோக்கி வருகிறவர்களை தி.மு.க.வும் த.வெ.க.வும் எப்படி நடத்துகிறது என்பதற்கு கடந்த இரண்டு நாட்களாக நடக்கும் நிகழ்வுகளே சாட்சியங்கள் ஆகும்.

அறிவாலயத்துக்கு வருகிறவர்கள் சுயமரியாதையுடன் நடத்தப்பட்டு தலைவரால் வரவேற்கப் படுகிறார்கள். த.வெ.க.வுக்குச் செல்கிறவர்கள் பனையூர் கட்சி அலுவலக வாசலில் மணிக்கணக்காக காத்திருக்க வைக்கப்படுகிறார்கள்.

தி.மு.க.வில் இயக்கத்தின் தலைவர் வருகை தந்து வரவேற்கிறார். இது தன்னைப் போலவே ஒவ்வொருவரையும் கழகத்துக்கு முக்கியம் என்று நினைப்பவராக தலைவர் இருப்பதைக் காட்டுகிறது. த.வெ.க. தலைவர் இவர் எவரையும் பார்ப்பது இல்லை. பார்த்தால் அவரது அழகு குறைந்து போகும். எவரையும் பார்ப்பது இல்லை.

**அ.தி.மு.க.வில் இருந்து நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் குதிரை பேரத்தால் பதவி விலகினார்கள். பதவி விலகிய உடனே த.வெ.க.வில் இணைந்தார்கள். அவர்கள் கூட, அக்கட்சியின் தலைவர் முன்னிலையில் சேரவில்லை. அவர் பாணியில் சொல்வதாக இருந்தால், 'அல்லுசில்லுகள்' முன்னிலையில்தான் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். எம்.எல்.ஏ.க்கள் கதியே இதுவாக இருக்கும் போது முன்னாள் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்களை விஜய் எப்படி மதிப்பார்?**

அ.தி.மு.க.வில் இருந்து விலகிய முன்னாள் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் கடந்த 6 ஆம் தேதியன்று காலை 10 மணிக்கு த.வெ.க. தலைமை அலுவலகத்துக்கு வரவும், முதலமைச்சர் விஜய் முன்னிலையில் கட்சியில் சேரலாம் என்று அறிவிக்கப்பட்டது. 9 மணியில் இருந்தே பலரும் வரத் தொடங்கி விட்டார்கள். ஆனால் 11 மணி வரை த.வெ.க. அலுவலக வாசல் கதவு திறக்கப்படவே இல்லை. எனவே ஒன்றரை மணிநேரமாக பலரும் பனையூர் வாசலில் வெயிலில் காத்துக் கிடந்தார்கள். இவர்களோடு அவர்களது ஆதரவாளர்களும் வந்திருந்ததால், வெட்கமாகப் போய்விட்டது. பின்னர் பின் பக்கக் கதவு மட்டும் திறக்கப்பட்டுள்ளது. அனைவரும் ஒரே நேரத்தில் உள்ளே நுழைந்ததால் தள்ளுமுள்ளு ஏற்பட்டுள்ளது.

**விஜய் வருவார் என்று எதிர்பார்த்தவர்களுக்கும் ஏமாற்றமே. அமைச்சர் புஸ்ஸி ஆனந்த் மட்டுமே இருந்து முன்னாள் அமைச்சர்களை உட்கார வைத்து போட்டோ எடுத்துள்ளார். தற்குறிகள் கூட்டத்துக்குள் போனால் இந்த மரியாதைதான் கிடைக்கும். சுயமரியாதை கிடைக்காது. அதற்கும் அவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.**

தி.மு.க.வில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த, செய்யூர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த பனையூர் பாபு இணைந்துள்ளார். செங்கல்பட்டைச் சேர்ந்த அ.தி.மு.க. வேட்பாளர் கஜேந்திரன் இணைந்தார். இவர்கள் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தான் இணைந்தார்கள். அறிவாலயம் கலைஞர் அரங்கம் அவர்களுக்காக விழாக்கோலம் பூண்டு இருந்தது. முக்கியமானவர்கள் மட்டுமல்ல, அவர்களோடு இணைய வந்தவர்களும் நாற்காலியில் அமர வைக்கப்பட்டு மதிக்கப்பட்டார்கள். என்ன நோக்கத்துக்காக தி.மு.க.வில் இணைகிறோம் என்று அவர்களுக்குப் பேச வாய்ப்பு தரப்பட்டது. தலைவருடனும், எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு உதயநிதி அவர்களுடனும் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். மனநிறைவோடு தங்களை அவர்கள் தி.மு.க.வில் இணைத்துக் கொண்ட மகிழ்ச்சியோடு திரும்பி இருக்கிறார்கள்.

**ஒருவர் கட்சி தொடங்கலாம். எல்லாக் கட்சியும் தி.மு.க. ஆகிவிட முடியாது. சுயமரியாதைக்காக உருவாக்கப்பட்ட இயக்கம் இது. அப்படித்தான் அனைவரையும் நடத்தும். சினிமா புகழால் கட்சியைத் தொடங்கி, படத்தை ஓட்டும் புரமோஷன் மாதிரியே கட்சியையும் தேர்தலையும் நடத்தி, அப்போதும் தனிப்பெரும் செல்வாக்கை அடைய முடியாமல், தனது கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டு வென்றவர்களின் ஆதரவைப் பெற்றே முதலமைச்சர் நாற்காலியில் உட்கார்ந்து உள்ள விஜய்க்கு, மக்களைப் பற்றிய மரியாதை எப்படி இருக்கும்?**

அ.தி.மு.க.வில் வெற்றி பெற்று வந்தவர்களுக்கு அமைச்சர் பதவியைத் தருகிறேன், வாரியம் தருகிறேன் என்று ஆசை வார்த்தைக் கூறி இழுத்து, தனது ஆட்சிக்கு ஆதரவாக வாக்களிக்க வைத்து, பின்னர் அமைச்சர் பதவி கிடையாது என்று ஏமாற்றி துரத்தி விட்டவர்தான் விஜய். 'கொறடா உத்தரவை மீறி வாக்களித்தால் பதவி போய்விடும்' என்று தெரிந்தே பட்டப்பகலில் ஏமாற்றப்பட்டார்கள் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள்.

**இப்போதும் அப்படித்தான் விஜய் முன்னால் சேரப் போகிறோம் என்று வரவழைக்கப்பட்டார்கள் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள். ஏமாற்றப்பட்டுள்ளார்கள். நம்ப வைத்து ஏமாற்றுவதில் வல்லவர் அவர். ஏழு மணிநேரமாக வருகிறேன், வருகிறேன் என்று சொல்லி ஏமாற்றி 41 உயிர்கள் பலியாகக் காரணமானவர் அல்லவா அவர்? அவருக்கு இதெல்லாம் பெரிய காரியமா?**

கரூரில் தன்னைப் பார்க்க வந்த 41 உயிர்கள் செப்டம்பர் 27 (2025) பலியானதைத் தொடர்ந்து அவர்கள் வீட்டுக்குப் போய் ஆறுதல் சொல்லப் போகாத விஜய், டிசம்பர் 27 அன்று மலேசியா சென்று தனது படத்தின் இசை வெளியீட்டு விழாவில் ஆடிக் கொண்டு இருந்தார். எனவே, அவரிடம் இது போன்ற மாண்பை எதிர்பார்ப்பது தவறு.

**மே 10 அன்று அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அன்று பெண்கள் சிங்கப்படையை உருவாக்கப் போவதாகக் கையெழுத்துப் போட்டார். இன்று ஜூன் 8. இன்று வரை உருவாக்கவில்லை. மே 27 அன்று தொடங்கப் போவதாக அறிவிப்பு வந்தது. அன்று தொடங்கவில்லை. மே 29 தொடங்கப் போவதாக அறிவிப்பு வந்தது. மேடை எல்லாம் போட்டார்கள். ஆனால் முதலமைச்சர் செல்லவில்லை. தனது மேனேஜர் வீடு திறப்பு விழாவுக்கு பட்டுவேட்டி கட்டிச் சென்று விட்டார். அவருக்கு எது முக்கியம் என்று அவருக்குத் தானே தெரியும்?**

••



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (08.06.2026) தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா தனது பேத்தி எம்.சமீனா சப்ரியத் – எஸ்.ஹனீப் கான் ஆகியோரின் திருமண விழா அழைப்பிதழை தனது துணைவியார் மற்றும் குடும்பத்தினருடன் சந்தித்து வழங்கினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.

### த,வெ,க,வினர் கொள்கையை – லட்சியத்தை சொல்லி ஓட்டு கேட்டு வெற்றி பெற்றார்களா?

# உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. மாபெரும் வெற்றி பெறும்!

## புதுக்கோட்டையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

புதுக்கோட்டை, ஜூன் 9 -

இந்தியா கூட்டணியில் நாங்கள் இல்லை காங்கிரஸ் இருக்கும் கூட்டணியில் நாங்கள் இல்லை, இனிமேல் எந்த காலத்திலும் முதுகில் குத்தி விட்டு ஓடியவர்களை சேர்க்க மாட்டோம் அவர்களோடு ஒட்டு உறவு கிடையாது. இனி கட்சி தொண்டர்கள் அவர்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், காங்கிரஸ் எங்கு உள்ளதோ அந்த கூட்டணியுடன் நாங்கள் இருக்க மாட்டோம். ஓடிப்போன மனைவியோடு யாரும் வாழ மாட்டார்கள், எதிர்காலத்தில் பா.ஜ.க.வோடு கூட்டணி செல்லும் வாய்ப்பு சத்தியமாக இல்லை என புதுக்கோட்டையில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டியளித்தார்.

ஆர்.எஸ்.பாரதி அளித்த பேட்டி வருமாறு:-

புதுக்கோட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தி.மு.க. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்க வருகை தந்த கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி புதுக்கோட்டையில் உள்ள தனியார் விடுதியில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில்:

ஆதவ் அர்ஜுனா அரசியலில் ஒரு கள்ள லாரி, எத்தனை கட்சி மாறிவந்துள்ளார். பல்வேறு கட்சிகள் மாறி வந்து தற்போது தவெகவுக்கு தாவியுள்ளார். அவர் இந்த கட்சியில் எத்தனை நாள் தாக்குப்பிடிப்பார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தி.மு.க. - அ.தி.மு.க. இந்த இரண்டு கட்சிகளிலும் மாறுவது வேறு. ஆனால் பல கட்சிகள் மாறிவருபவர்கள் ஓரிடத்தில் நிலையாக நிற்க மாட்டார்கள்.

அதற்கு இன்றைய உதாரணம் ஆதவ் அர்ஜுனா, அர்ப்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பது போல், ஆதவ் அர்ஜுனாவிற்கு வாழ்வு வந்துள்ளது.

### ஆதவ் அர்ஜூனா புது துடைப்பம்!

லாட்டரி சீட்டில் பணம் சேர்த்து, எப்படி பணம் வந்தது என்று தெரியாமல், அந்த பணத்தை எப்படி செலவு செய்வது என்று தெரியாமல், கண்ணு மண்ணு தெரியாமல் தடித்த வார்த்தைகளை ஆதவ் அர்ஜுனா பயன்படுத்துகிறார். அவருக்கு தி.மு.க.வின் வரலாறு தெரியாது. 76 ஆண்டுகால தி.மு.க. வரலாற்றில் இவரைப் போன்ற பல பேரை நாங்கள் பார்த்துள்ளோம். ஆதவ் அர்ஜுனா போன்று பல பேர் இருந்தனர். அவர்களெல்லாம் இன்று இல்லை.



புது துடைப்பம் கொஞ்சம் வேகமாகத்தான் பெருக்கும் என்பார்கள். அதேபோல் ஆதவ் அர்ஜுனா ஒரு புது துடைப்பம்.

ரொம்ப வேகமாக பேசினால் மக்கள் அதற்கு திரும்ப பதில் அடி கொடுப்பார்கள் இதுதான் தமிழ்நாட்டின் வரலாறு. இதை ஆதவ் அர்ஜுனா புரிந்து கொள்ள வேண்டும்.

நேற்று உள்ளாட்சித் தேர்தலில் ஒரு இடத்தில் வர முடியுமா என்று ஆதவ் அர்ஜுனா சவால் விடுகிறார். அடிமடையனுக்கு கூட தெரியும் 1984 தேர்தல் குறித்து. தி.மு.க. தோன்றிய காலத்தில் இருந்து பல தோல்விகளையும் கண்டுள்ளோம். எங்களைப்போல வெற்றி பெற்றவர்களும் கிடையாது. 1957-ல் இருந்து இதுவரையில் தி.மு.க.வுக்கு என்று ஒரு தனிப்பட்ட செல்வாக்கு உள்ளது. அது எந்த காலத்திலும் குறைந்தது கிடையாது. இவ்வளவு பேர் அணி மாறுகிறார்களே..

தி.மு.க.வில் இருந்து யாராவது அணி மாறி உள்ளனரா? தி.மு.க. தொண்டர்கள் எங்கும் செல்ல மாட்டார்கள். த.வெ.க. கொள்கையைச் சொல்லி லட்சியத்தை சொல்லி ஓட்டு கேட்டு வெற்றி பெற்றார்களா?

யார் எம்.எல்.ஏ. என்று கூட தெரியாமல் விஜய்க்காக வாக்கு அளித்துள்ளனர். எம்.எல்.ஏ. பெயர், மந்திரி பெயர் கூட தொகுதி மக்களுக்கு தெரியாது?

லாட்டரி சீட்டு அடித்தது போல் ஒருலக்கு தமிழக வெற்றிக் கழகத்திற்கு அடித்துள்ளது. அது கூட முழு மெஜாரிட்டி கிடையாது. இந்த தேர்தல் ஒரு விபத்து. உள்ளாட்சித் தேர்தலில் உள்ளூர் காரர்கள் யார் தகுதியானவர்களோ அவர்களுக்கு தான் மக்கள் வாக்களிப்பார்கள்,

இப்ப போட்ட வாக்குகள் எல்லாம் விஜய்க்காக வந்ததே தவிர வேறு யாருக்காகவும் கிடையாது.

இப்போது வந்துள்ள மந்திரிகள் எல்லாம் யோக்கியர்களா? விஜய் வீட்டிற்கு ரெய்டு செல்ல சென்றவர் மந்திரி ஆகி உள்ளார் என்றால் அது எப்படி என்று சாதாரண மக்களுக்கு கூட தெரியும். இதுதான் மிகப்பெரிய லஞ்சம். அன்று அவரை காப்பாற்றியதற்காக இன்று அவருக்கு அமைச்சர் பதவி கொடுத்துள்ளார். இப்படிப்பட்ட யோக்கியர்களை கையில் வைத்துக் கொண்டு, ஆதவ் அர்ஜுனா போன்றவர்கள் எல்லாம் பேசினால் தி.மு.க. காரர்கள் பேசினால் அவர்கள் தாங்க மாட்டார்கள்.

மாணிக் தாகூர் எப்படி வெற்றி பெற்றார் என்று அவருக்கென்று ஒரு மனசாட்சி இருந்தால் முதலில் அவர் அதை சொல்லட்டும், அவர் வெற்றியை அவர் முதலில் ஆய்வு செய்யட்டும் அப்புறம் தி.மு.க. பற்றி பேசட்டும். ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு பதவிக்காக செல்பவர்கள் ரொம்ப நாள் நிற்க மாட்டார்கள். ஆட்சி திடீரென ஆறு மாதத்தில் கவிழ்ந்து விட்டால் மீண்டும் அதே கட்சிக்கு வந்து விடுவார்கள்.

ஆயாராம், சாயாராம் எல்லாம் தமிழ்நாட்டிற்கு தெரியாது. ஆனால் அதனை இப்போது போயிருப்பவர்கள் காட்டுகின்றனர்.

ஆனால் ஒன்று,

ஸ்டாலினுக்கோ, உதயநிதி ஸ்டாலினுக்கோ சவால் விடுகிற தகுதி ஆதவ் அர்ஜுனாவுக்கு இல்லை.

### ஓட்டுப் போட்ட மக்கள் புலம்புகிறார்கள்!

எம்.ஜி.ஆரை விட பெரிய தலைவர்கள் விஜயும் அல்ல மற்றவர்களும் அல்ல. ஆனால் 1984 தேர்தலுக்கு பின்னர் 1986 உள்ளாட்சி தேர்தலில் 102 நகராட்சியில் 90 நகராட்சியில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றது.

ஆறு மாதத்தில் முடிந்தால் உள்ளாட்சித் தேர்தலை வையுங்கள், ஒரு மேயர் இடத்திலாவது தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்றால் நான் ஒரு பக்க மீசையை எடுத்துக் கொள்கிறேன்.

### இந்த சவாலை ஏற்க தமிழக வெற்றிக் கழகம் தயாரா?

காரணம் தமிழ்நாடு மக்கள் அவர்களுக்கு வாக்களித்துவிட்டு இந்த ஒரு மாதமாக சொல்லுகின்றனர். தெரியாமல் வாக்களித்து விட்டோம் என்று.

எல்லோரும் பாலை ஊற்ற போகிறார்கள். நம்ம மட்டும் தண்ணி ஊத்துவோம் என்று நினைத்து எல்லோரும் தண்ணி ஊத்தி விட்டனர். அதில் தான் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த விசித்திரம் நீண்ட நாள் நீடிக்காது. எவ்வளவு சீக்கிரம் வந்ததோ அவ்வளவு சீக்கிரம் கீழே வந்து விடும்.

விஜய்க்கு ஒரு ஆபத்து வரப்போகிறது என்றால் அதற்கு காரணம் ஆதவ் அர்ஜுனா தான்.

அண்ணாமலை எப்படி கட்சி ஆரம்பிக்கிறார்? யாரை எதிர்க்க போகிறார்? யாருக்கு பி பார் டியாக இருக்கப் போகிறார் யாருக்கு சி பார்டியாக இருக்க போகிறார் எந்த டீம்மாக இருக்கப் போகிறாய் என்பதை பார்த்து தான் சொல்ல முடியும்.

தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி தொடர்கிறது என்று ப.சிதம்பரம் கூறியிருந்தாலும் நாங்கள் காங்கிரஸ் கூட்டணியை டைவர்ஸ் செய்து விட்டோம்.

சில கட்சிகள் எங்களை விட்டு சென்றவர்கள் எங்களுடைய ஆலோசனையோடு சென்று உள்ளனர். அது ஒரு வகையான டைவர்ஸ்.

ஆனால் காங்கிரஸ் உடன் செய்துள்ள டைவர்ஸ் வேறு வகையானது. (கள்ளத்தொடர்பு)

### கொள்கைக்காக இயங்கும் கட்சி தி.மு.க.!

இனிமேல் எந்த காலத்திலும் முதுகில் குத்திவிட்டு ஓடியவர்களை சேர்க்க மாட்டோம். அவர்களோடு ஒட்டு உறவு கிடையாது.

இனி கட்சி தொண்டன் அவர்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

காங்கிரஸ் எங்கு உள்ளதோ அந்தக் கூட்டணியுடன் நாங்கள் இருக்க மாட்டோம். ஓடிப்போன மனைவியோடு யாரும் வாழ மாட்டார்கள்.

எதிர்காலத்தில் பா.ஜ.க.வோடு கூட்டணி செல்லும் வாய்ப்பு சத்தியமாக இல்லை.

துரை வைகோ தற்போது மாற்றிப் பேசுகிறார். இன்று மாலை கூறியுள்ளார் தி.மு.க.வில் தான் நீடிக்கிறோம் என்று கூறியுள்ளார்.

யார் தமிழக வெற்றிக் கழகம் பக்கம் போனாலும் நாங்கள் கவலைப்பட போவதில்லை.

ஜெயலலிதாவையே தோற்கடித்தவர்கள் நாங்கள். தி.மு.க. அரசியல் கட்சி அல்ல. இலட்சியத்துக்காக கொள்கைக்காக இயங்கும் கட்சி. இதனை யாராலும் அழிக்க முடியாது.

நிர்மல் குமார் தற்போது அமைச்சர். இதற்கு முன்பாக அ.தி.மு.க.வின் செய்தி தொடர்பாளர். அடுத்து எந்த கட்சியில் இருக்கிறார் என்பதை பார்ப்போம். காலையில் ஒரு கட்சி மாலையில் ஒரு கட்சி லாரியில் ஏறிப் போகிறவர்கள் பற்றி எல்லாம் நான் பேச முடியாது.

இந்தியா கூட்டணியில் நாங்கள் இல்லை. காங்கிரஸ் இருக்கும் கூட்டணியில் நாங்கள் இல்லை.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டியளித்தார்.




திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடகாடு ஊராட்சி மலை கிராமப் பகுதிகளில் வாக்காளர்களுக்கு முன்னாள் அமைச்சர் – சட்டமன்ற உறுப்பினர் அர. சக்கரபாணி நன்றி தெரிவித்துப் பேசினார்.